# Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 215/2024

2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 16-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 6 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | ஓவியர் |
| பெயர். | - | அய்யனார் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | ராகவன் | சமயம் | - | |
| கிராமம் | - | ஆமூர் | வயது | - | 43 |

16.07.2025

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது ஆமூரில் வசித்து ஓவியராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை கடந்த 04.05.2023 ந் தேதி மதியம் 12.45 மணியளவில் எங்கள் ஊரைச்சேர்ந்த தெய்வமணி என்பவர் மணங்குப்பம் கூட்டு ரோட்டில் நின்று கொண்டிருந்த போது மடப்பட்டிலிருந்து திருக்கோவிலூர் நோக்கி சென்ற லாரி அதிவேகமாக மோதி விபத்து ஏற்படுத்தியது.

2. அந்த விபத்து வழக்கு சம்மந்தமாக மறுநாள் 05.05.2023 அன்று காலை சுமார் 05.30-06.00 மணியளவில் டீ சாப்பிடுவதற்காக மெயின் ரோட்டிற்கு வந்த போது போலீசார் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அவர்கள் விசாரணைக்கு நான் சாட்சியாக இருந்து அவர்கள் தயார் செய்த பார்வை மகசரில் சாட்சி கையொப்பமிட்டேன். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும்.** விபத்து ஏற்படுத்திய லாரியின் பதிவெண்ணை நான் கவனிக்கவில்லை. விபத்து ஏற்படுத்திய லாரியின் ஓட்டுநர் தப்பித்து ஓடிவிட்டார். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகே எனக்கு வீடு கிடையாது என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் நான் பார்த்த போது வண்டி டிரைவர் இறங்கி ஓடிவிட்டார் என்ற விவரத்தை போலீசாரிடம் சொன்னேனா அதில் எழுதியிருந்ததா என்றால் ஆமாம். நான் கையெழுத்து போட்ட பேப்பர், வெள்ளை பேப்பரா, எழுதிய பேப்பரா அல்லது வரைபடமா என்றால் வரைபடத்தின் கீழே போட்டேன்.

2. அ.சா.1 எனக்கு தூரத்து அண்ணன் தம்பி உறவு முறை. நான் அ.சா.1 உடன் காவல் நிலையம் சென்று அங்கு கையெழுத்து போட்டுவிட்டு சம்பவ இடத்தில் கையெழுத்து போட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.